IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, ARNI, T.V.M.DT.

DEPOSITION OF WITNESS

(As per XXIII case of Criminal procedure)

SESSIONS CASE NO. 42/2024

Deposition of witness for prosecution : PW2

Defense :

| | | |
|---|---|---|
| Name | : | குமரேசன் |
| Father's Name | : | கதிர்வேலு |
| Village | : | முள்ளிப்பட்டு |
| Taluk | : | ஆரணி |
| Caste | : | |
| Calling | : | டெய்லர் |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.01.2025.

**முதல் விசாரணை**

**1. எதிரி ஆஜர்.**

2. நான் நெம்பர் 1/102 ஹவுசிங் போர்டு முள்ளிப்பட்டு ரோடு ஆரணியில் குடியிருந்து வருகிறேன். டெய்லர் வேலை செய்து வருகிறேன். 20.03.2021 அன்று மாலை 5.00 மணிக்கு நானும் மணி என்பவரும் ஆரணி முனிசிபாலிட்டி அலுவலகம் அருகில் வந்தோம். அன்புவேல் என்பவர் அடித்துவிட்டதாக கேள்விபட்டு தான் நானும் மணியும் முனிசிபாலிட்டி அலுவலகம் அருகில் சென்றோம். அங்கு போலீசார் விசாரித்து கொண்டு இருந்தார்கள். அன்பு வேல் பூங்காவனத்தை அடித்து விட்டதாக சொன்னார்கள்.

3. போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட வந்திருந்தார்கள். போலீசார் நடந்த சம்பவம் குறித்து எழுதி கொண்டு என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். சம்பவ இடத்தில் வரைபடம் வரைந்தார்கள். என்னுடன் மணி என்பவரும் கையெழுத்து செய்தார். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் சாட்சி கையெழுத்து என்னுடையது தான். பார்வை மகசர் **அ.த.சா.ஆ3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. போலீசார் சம்பவ இடத்தில் இருந்து ஒரு உருட்டு கட்டை எடுத்தார்கள். என்னிடம் காட்டப்படும் சா.பொ.1 உருட்டு கட்டை சம்பவ இடத்தில் இருந்தது தான். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதல் சாட்சி கையெழுத்து என்னுடையது தான்.

என்னுடன் மணி என்பவரும் சாட்சி கையெழுத்து செய்தார். கைப்பற்றுதல் மகசர் **அ.த.சா.ஆ4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**குறுக்கு விசாரணை**</u>

1. என் முன்னிலையில் வரைந்ததாக சொல்லப்படும் வரைபடத்தில் என்ன வரையப்பட்டது என்றால் போலீசார் படித்து காண்பித்தார்கள். அவ்வாறு போலீசார் என்ன படித்து காண்பித்தார்கள் என்று சொல்லமுடியுமா என்றால் நினைவில்லை.

2. வழக்கின் புகார் தாரர் அ.சா.1 பூங்காவனம் இந்த வழக்கிற்கு முன்னர் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எதிரி அன்புவேலிடம் நான் சீட்டு கட்டி வருகிறேன். பூங்காவனமும் எதிரியிடம் சீட்டு கட்டி வருகிறார். சீட்டு சம்பந்தமாக போக வர இருந்த சமயத்தில் எனக்கு பூங்காவனம் பழக்கம் ஆனார்.

3. சீட்டு பணம் பிரச்சனை சம்பந்தமாக சம்பவ தினத்தன்று காலை பாதிக்கப்பட்டவர்கள் திருவண்ணாமலை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு புகார் கொடுக்க சென்றார்கள் என்றும் அந்த சமயம் நான் அவர்களுடன் சென்றேனா என்றால் அன்றைய தினம் செல்லவில்லை. எதிரி எனக்கு சீட்டு பாக்கி ரூ.1,00,000/- தர வேண்டும். சீட்டு பாக்கி எனக்கு பைசல் செய்யப்படவில்லை.

4. சீட்டு பணம் பிரச்சனை சம்பந்தமாக நாங்கள் ஆரணி நகர காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். அந்த புகார் திருவண்ணாமலை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. அந்த புகாரின் பேரில் எங்களை விசாரணைக்கு அழைப்பதாக சொன்னார்கள். ஆனால் விசாரணைக்கு நாங்கள் அழைக்கப்படவில்லை.

5. அவ்வாறு நாங்கள் கொடுத்த புகார் நிலுவையில் இருந்த சமயத்தில் சம்பவ தினத்தன்று அன்றைய தேதியில் தமிழக முதலமைச்சராக இருந்த திரு. எடப்பாடி. பழனிச்சாமி ஆரணிக்கு சுற்றுப்பயணம் வந்தார் என்றும் அப்போது எதிரியால் சீட்டு தொகை திருப்பி கொடுக்கப்படாமல் பாதிக்கப்பட்ட நபர்கள் முதலமைச்சரின் காரை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

6. சம்பவ தினத்தன்று எதிரி கைது செய்யப்பட்டதாக கேள்வி பட்டு தான் சம்பவ இடத்திற்கு நான் வந்தேன் என்றால் கைது செய்ததாக கேள்விபடவில்லை. ஆனால் எதிரி ஒருவரை அடித்ததாக கேள்விபட்டு வந்தேன். நான் சம்பவ இடத்திற்கு சென்றபோது போலீசார் வரைபடம் வரைந்து கொண்டு இருந்தார்கள். அப்போது எதிரி மற்றும் அ.சா1 பூங்காவனம் அங்கு இருந்தார்களா என்றால் இல்லை. சாட்சி வேலு அங்கு இருந்தாரா என்றால் அவர் யார் என்று எனக்கு தெரியாது.

7. போலீசாரிடம் எதிரி யாரை எந்த இடத்தில் அடித்தார் என்பது யார் அடையாளம் காட்டினார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. போலீசார் வரைந்த வரைபடத்தில் என்னை சாட்சி கையெழுத்து போட சொன்னார்கள் என்றும் வரைபடம் குறித்த மற்ற விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல.

8. வரைபடம் வரைந்த இடத்தில் எதிரி அ.சா1 ஐ தாக்கிய ஆயுதம் இருந்ததா என்றால் இருந்தது. உருட்டு கட்டை ஒன்று முனிசிபாலிட்டி அலுவலக கேட் அருகில் இருந்தது. அந்த உருட்டு கட்டை வரைபடத்தில் போலீசாரால் காட்டபட்டுள்ளதா என்றால் நினைவில்லை. எனக்கும் எதிரிக்கும் சீட்டு சம்பந்தமாக ஏற்கனவே முன்விரோதம் இருந்து வந்தது என்றும் அதனால் தான் நானாகவே முன்வந்து சாட்சி கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல.

9. நான் சம்பவ இடத்திற்கு சென்ற போது அங்கு கூட்டமாக இருந்தார்களா என்றால் சுமார் ஐந்து ஆறு நபர்கள் இருந்தார்கள் மற்றும் போலீசார் இருந்தார்கள். பார்வை மகசரில் மற்றொரு சாட்சியான மணி என்பவரை நான் தான் சம்பவ இடத்திற்கு அழைத்து சென்றேன் என்றால் சரிதான்.

10. பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசர்களில் நான் காவல் நிலையத்தில் வைத்து தான் கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் வைத்து தான் கையெழுத்து செய்தேன். சம்பவ இடத்தில் கைபற்றப்பட்ட ஆயுதத்தை சம்பவத்தின் போது யார் பயன்படுத்தினார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.